மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, கரூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் கரூர் காமராஜர் தினசரி காய்கறி சந்தை கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், ஆணையர் சுதா உள்ளிட்டோர் உள்ளனர்.

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு ஆராய்ச்சி மையத்தில், கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், 31 குழுக்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கு ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கினார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், உதகை நகர்மன்றத்தலைவர் வாணீஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கழக தோழர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கவனத்திற்கு!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள்நீக்கவும்-திருத்தம்செய்யவும்மனுச்செய்யகாலஅவகாசம்கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம்- 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம்- 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம்- 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப்படிவமான படிவம்-6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்-6ன் கலம் IV-ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1.வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024.

2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள்23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024(ஞாயிற்றுக்கிழமை).

4.இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:

வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்றத் தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும். மேலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் வாக்காளர் சேர்க்கும் பணிகளைதலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பார்வையிட உள்ளனர்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் சா.சி.சிவசங்கர் - தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்பு!

பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், நவ. 23-

பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளர் வீ.ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் நாளை (24.11.2024,ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணியளவில், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில்,

பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கே.என். அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஏ.கே. அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

அது சமயம், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

வருகிற 27.11.2024 அன்று மாநில இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா குறித்து,

23.11.2024,24.11.2024 ஆகிய தேதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மின்வாரியத்திற்கும்

அதானி நிறுவனத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை!

அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டி!

கரூர், நவ.23.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் அதானி நிறுவனத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என சமூக வலைதளங்களில் பரவும் வதந்திக்கு மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி முற்றுப்புள்ளி வைத்தார். கரூரில் செய்தியாளர்களிடம் பேசிய போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கரூர் மாநகராட்சி, மண்டலம் II வார்டு எண்34ல் நடைபெற்று வரும் காமராஜர் தினசரி காய்கறி சந்தை கட்டுமானப் பணிகளை மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்விற்குப்பின்னர் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கரூர் காமராஜ் தினசரி காய்கறி சந்தை வணிகர்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு இந்த காய்கறி சந்தையை மேம்படுத்துவதற்காக கலைஞர் நகர்ப்புற

மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.6.75 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து, சுமார் 3955.00 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டுமானப் பணிகள் துவங்கின.

அந்த வகையில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட கரூர் மாநகரின் அடையாளங்களில் ஒன்றான 78 வருட பழமையான காமராஜ் தினசரி சந்தை மேம்படுத்தப்பட்டுவருகின்ற பணிகளை ஆய்வு செய்யப்பட்டது. இக்காய்கறி சந்தையில் 134 காய்கறி மற்றும் பழக்கடைகள் மற்றும் 25 மளிகை கடைகள் என மொத்தம் 160 கடைகள் அமைக்கப்படவுள்ளது. காய்கறி மற்றும் பழக்கடைகள் 10 × 8 என்ற அளவிலும் மற்றும் மளிகை கடைகள் 10x10 என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் 74 சதவீதம் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் வருகின்ற டிசம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதே போன்று கரூர் மாவட்டத்தில் புதிய பேருந்துநிலையம், நூலகம், மகளிர் தங்கும் விடுதி உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை பொறுத்த வரையில் அதானி நிறுவனத்துடன் எந்தவிதமான வணிக ரீதியான ஒப்பந்தமும் செய்யப்படவில்லை. தமிழ்நாட்டின் மின் தேவையை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக் கேற்ப திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசின் மின்சார துறையிடமிருந்து 1500 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்துடன் தான் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்பந்தம் செய்துள்ளது. குறிப்பாக சோலார் எனர்ஜி கார்பரேசன் ஆஃப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனம் தான் மற்ற மாநிலங்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். அதற்கேற்ப அந்த வகையில் தான் தமிழ்நாடு மின்சார வாரியம் அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு சுமார் 1500 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. அதுவும் மிக குறைந்த விலையில் ஒரு யூனிட் ரூ.2.61 பைசா என்ற அளவில் மிக மிக குறைந்த விலையில் பெறுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அதே போல் மின்னகம் செயலி மூலம் வரப்பெற்ற புகார்களுக்கு ஏறக்குறைய 95 சதவீதம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. மீதமுள்ள புகார்களுக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி விரைவாக அப்பணிகளும் நடைபெற்று கொண்டு வருகின்றன.

தற்போது மின் உற்பத்திக்கு தேவையான அளவு தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் நிலக்கரி போதுமான அளவு கையிருப்பு உள்ளது. அமராவதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட மேலப்பாளையம் உயர் மட்ட பாலத்திற்கு இணைப்பு சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசுக்கு கருத்துரு தயார் செய்யப்பட்டு விரைவில் அப்பணிகள் துவங்கப்படவுள்ளது. இவ்வாறு அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாநகராட்சி மேயர் வெ. கவிதா. மாநகராட்சி ஆணையாளர் சுதா. துணை மேயர் ப.சரவணன், மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா, க.அன்பரசன், எஸ். சக்திவேல், மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் - திருச்சி வருகை தரும்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வரவேற்பு!

மாவட்டச் செயலாளர்கள் ந. தியாகராஜன் - க. வைரமணி அறிக்கை!

திருச்சி, நவ. 23-

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் துணை முதல்வரும் கழகத்தின் இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (23.11.2024 ம் நாள் சனிக்கிழமை) மதியம் 1.00 மணியளவில் விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தர விருக்கின்றார். திருச்சிக்கு வருகை தரும் துணை முதல்வர் அவர்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களின் தலைமையில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட

தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகின்றது. அன்று மாலை 4.00 மணியளவில் துறையூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையினையும், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண்நேரு அவர்களின் புதிய அலுவலகத்தையும், இளைஞர் அணி சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய நூலகத்தி னையும் திறந்து வைத்து சிறப்புரையாற்றவுள்ளார் அது சமயம் திருச்சியில் இருந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள துறையூர் செல்லும் வழியில் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நெ 1, டோல்கேட்டில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது. இதனை தொடர்ந்து வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நொச்சியம், மண்ணச்சநல்லூர், திருவெள்ளறை, புலிவலம், கரட்டாம்பட்டி, பகலவாடி, காளிப்பட்டி ஆகிய இடங்களில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

இந்நிகழ்ச்சிகளில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து துணை முதல்வராக பொறுப்பேற்றப்பிறகு திருச்சி மாவட்டத்திற்கு வருகை தரும் அவருக்கு எழுச்சியாகவும், உற்சாகமாகவும் வரவேற்று நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்கவேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை கிழக்கு ஒன்றியம் நாங்குப்பட்டியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடையை மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு பொருட்கள் வழங்கினார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்டக் கவுன்சிலர்கள் சாந்தி தங்கசிங்கம், கை.பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விளாப்பட்டி சிவா, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ராஜா ஸ்டாலின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் வருவாய்த்துறை கூட்டுறவுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.